DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

Continuation of Cross Examination of Witness

16.11.2022

**அ.சா.2 - மாரியம்மாள்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) என்னுடன் பிறந்த சகோதரி பழனியம்மாள் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டாரா என்றால், இறந்துவிட்டார். தற்போது சாட்சி அது எனக்குத் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறார். இன்று வேறொரு வழக்கில் நான் குற்றவாளியாக இதே நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன் என்றால், அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு புதுப்பட்டி வீட்டில் வைத்து திருமணம் நடந்தது. நான் முதல் விசாரணையில் 40 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்ததாக கூறியுள்ள சூழ்நிலையிலும், எனது மகன் குருசாமி 1977ம் வருடம் பிறந்துள்ள சூழ்நிலையிலும், 1982க்கு முன்னால் எனக்கும், குருசாமிக்கும் என்னுடைய மகன் பிறந்திருக்க முடியாது என்றால், சரியல்ல.

2) திருமணத்திற்கு முன்பு எனக்கும், குருசாமிக்கும் தொடர்பு இருந்ததா என்றால், எனது வீட்டிற்கு வரப்போக இருந்தார், தொடர்பு இருந்ததா என்று தெரியவில்லை. எனக்கு மருத்துவச்சி பிரசவம் பார்த்தார். எனக்கு மருத்துவச்சி பிரசவம் பார்த்திருந்தால் எனது குழந்தையின் பிறப்பு பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றாலும், மேற்படி பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்யாததால், எனக்கும், குருசாமிக்கும் குழந்தை பிறக்கவில்லை என்றால், சரியல்ல. சுசீலா என் மீது தாக்கல் செய்த வழக்கில் என்னுடைய கணவர் பெயர் சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், குருசாமி என்று குறிப்பிடவில்லை என்றாலும், சரியல்ல. அந்த ஆவணங்களை ஒப்புக் கொண்டால் நான் பொய் சொல்லுவது தெரிந்துவிடும் என்பதால் தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

3) நான் என்னுடைய ஆதார் கார்டை நீதிமன்றத்தில் கொண்டு வந்திருக்கிறேனா என்றால், கொண்டு வரவில்லை. மேற்படி ஆதார் அடையாள அட்டையில் எனது கணவர் பெயர் சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், குருசாமி என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும், சரியல்ல, குருசாமி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. சுசீலா தாக்கல் செய்த வழக்கில் நான் தாக்கல் செய்த ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகலில் எனது கணவர் பெயர் சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், குருசாமி என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும், சரியல்ல. மேற்படி வழக்கில் நான் தாக்கல் செய்த சரண்டர் மனுவிலும், என்னுடைய கணவர் பெயர் சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், குருசாமி என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும், சரியல்ல.

4) நான் மேற்படி வழக்கில் வழங்கியுள்ள வக்காலத்திலும் எனது கணவர் பெயர் சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், குருசாமி என்று குறிப்பிடவில்லை என்றாலும், சரியல்ல. நான் சத்தியப்பிரமாணத்தின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கும், குருசாமிக்கும் திருமணம் நடந்ததை உறுதி செய்வதற்கு எந்த விதமான ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யாததால், நான் குருசாமியின் மனைவி அல்ல என்றால், சரியல்ல. எனக்கு குருசாமியின் மூலமாகத்தான் எனது மகன் பிறந்தான் என்பதைக் காட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. CMP.13951/2022 மனுவிலும் எனது பெயர் மாரியம்மாள், க/பெ.சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், எனது மகனின் அப்பா பெயர் சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல. நான் கொடுத்த ஆவணங்களில் இருக்கும் விபரங்களுக்கு எதிராக நான் சாட்சியம் அளிப்பதால் நான் நம்பத்தகுந்த சாட்சியம் அல்ல என்றால், சரியல்ல.

5) எனது அப்பா சித்தகவுண்டர் ஒரு ஏக்கர் பூமியை எனது பெயருக்கு தான செட்டில் மெண்ட் எழுதி வைத்தாரா என்றால், இல்லை. மேற்படி 1 ஏக்கர் நிலத்திலிருந்து, 3 சென்ட் நிலத்தை எனது மகனுக்கு நான் எழுதி வைத்துள்ளேன் என்றால், சரியல்ல. மேற்படி 3 சென்ட் நிலத்தில்தான் வீடுகட்டி நானும், எனது மகன் ஆகியோரும் குடியிருந்து

வருகிறோம் என்றால், சரிதான். அந்த அசல் ஆவணத்தை ஒப்படைத்து 3 செண்ட் நிலத்தில் லோன் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால், எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. முதல் விசாரணையில் நான் என்ன சொல்லுகிறேன் என்று ஞாபகம் இல்லாமல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது மகன் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

6) எனது கணவருக்கு காசநோய் இருந்ததது தொடர்பாக அந்தியூரில் மருத்துவம் பார்த்ததற்கான ஆவணங்கள் எதையும் போலீசாரிடமோ அல்லது நீதிமன்றத்திலோ ஒப்படைக்கவில்லை என்றால், சரியல்ல. எனது கணவருக்கு சுமார் 10 நாட்களாக காசநோய் இருந்தது. எனது கணவருக்கு, காவிரி ஆற்றிற்கு அருகில் நல்லடக்கம் செய்தோமா என்றால், சரிதான். நான் எப்போதும் குருசாமியுடன் சேர்ந்து வாழ்ந்ததில்லை என்றால், சரியல்ல. எனக்கும், மற்ற 7 பேருக்கும் எதிராக சுசீலா என்பவர் தாக்கல் செய்த CC.373/2022 என்ற வழக்கின் எதிரி சென்ட்ராயன் எனக்கு அக்கா மகன் என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. பழனியம்மாளின் கணவர் எப்போது இறந்தார் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. எனது தங்கை கணவரும் தற்போது உயிருடன் இல்லை இறந்துவிட்டார் என்றால், சரிதான், இறந்து ரொம்ப காலமாகிவிட்டது. எனது மகனின் பிறப்பு சான்று உண்மையாக இருந்திருந்தால் அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்து இருப்பேன் என்றாலும், அது உண்மையாக இல்லை என்பதால்தான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால், சரியல்ல.

7) எனது கணவர் பெயர் சின்னத்தம்பி என்பதால் தான் எனது மகனை பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தபோது அவரது பெயரை சின்னத்தம்பி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. இறந்துபோன குருசாமிக்கு வேறு பெயர் எதுவும் இல்லை என்றால், சரிதான். எனது மகனும், நானும் தாக்கல் செய்த சிவில் வழக்கு குறித்த விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது என்றால், அது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி இறந்துபோன குருசாமியுடைய சொத்தை ஏமாற்றி, அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நானும், மற்றவர்களும் பொய்யான ஆவணங்களை தயாரித்து, ஏமாற்றி, பொய் வழக்கு தாக்கல்

செய்து நீதிமன்றத்தை ஏமாற்றியுள்ளோம் என்றால், சரியல்ல. இந்த நீதிமன்றத்தைத் தவிர வேறு எந்த நீதிமன்றத்திலும் நான் சாட்சி சொல்லவில்லை என்றால், நான் போகவில்லை. பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் தீர்ப்பைப் பெற்று, அதனடிப்படையில் எனது மகன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இந்த வழக்கை தாக்கல் செய்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு, எனது கணவர் குறித்த அனைத்து விவரங்களும் தெரியும் என்றாலும், சுசீலா தாக்கல் செய்துள்ள வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டியும், சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காகவும், எனக்கு எதுவும் தெரியாது என்று கூறி, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

8) நானும், எனது மகனும் சேர்ந்து, மாரிமுத்து என்பவருக்கு நிலத்தை கிரையம் செய்து கொடுத்திருக்கிறோமா அல்லது ஒப்படைத்திருக்கிறோமா என்றால், எனது மகனைக் கேட்டால் தான் தெரியும். மேற்படி சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டு தற்போது எனக்குத் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 10 வருடங்களாக கள்ளாங்காட்டில் குடியிருந்து வந்தோம் என்ற விவரத்தை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. அதற்குரிய ஆவணங்கள் எதையும் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. சுசீலா கொடுத்த புகாரின் அடிப்படையில் என்னையும், எனது மகனையும் போலீசார் விசாரணைக்கு அழைத்தார்களா என்றால், அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கிலும் போலீசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை என்றால், சரிதான். நான் உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**